# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S. No. 118/2021

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | தனராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.02.2024.

<u>முதல் விசாரணை:</u>

1. நான் அதிசயபுரம், வடக்குத்தெரு, கதவு எண்.7/52 ல் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனார்பெயர் முத்துசாமி பாண்டிய நாடார். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அதனை பெற்றுக்கொண்டு சாட்சியம் அளிப்பதற்காக வந்துள்ளேன்.

2. சாட்சி அழைப்பாணையில் 28.01.1983 தேதியிட்ட கிரைய ஆவணம், 902 எண் கொண்ட பட்டா ஆகியவற்றின் நகலை தாக்கல் செய்தவற்காக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி 28.01.1983 தேதியிட்ட 112/1983 எண் கொண்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது சா.சா.ஆ.1,** அதைபோல் மேற்படி பட்டாவையும் தாக்கல் செய்கிறேன். **அது சா.சா.ஆ.2.**

3. சா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை உங்களுக்கு எழுதிக்கொடுத்தது யார் என்றால் ராமநாத செட்டியார் எழுதிக்கொடுத்தார். சா.சா.ஆ.1 ன்படி எந்தெந்த சர்வே எண் சொத்துக்களை கிரையம் வாங்கினீர்கள் என்றால் சர்வே எண்கள். 204, 218, 219, 220 போன்ற சொத்துக்களை கிரையம் வாங்கினேன். சர்வே எண்.218 ல் எத்தனை செண்டை உங்களது சகோதரர் செல்வராஜ்க்கு கொடுத்துள்ளீர்கள் என்றால் 90 செண்டை கொடுத்துள்ளேன்.

4. மேற்படி 90 சென்டை கிரையமாக கொடுத்தீர்களா எனறால் இல்லை. வாய்மொழியாக கொடுத்துவிட்டு அதற்குபதிலாக சர்வே எண்.210/1 எப் -ல் உள்ள சொத்தை எனது அண்ணனிடமிருந்து பெற்றுக்கொண்டேன். எந்த வருடம் வாய்மொழியாக கொடுத்தீர்கள் என்றால் 1985 ல் கொடுத்தேன். சர்வே எண்.218 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண்.218/1,2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

5. சர்வே எண்.218/1,2 யை யார் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் மேற்படி செல்வராஜ்-ன் மகன் மற்றும் மருமகள் அனுபவம் செய்துவருகிறார்கள்.

**குறுக்கு விசாரணை**

6. இந்த வழக்கு என்ன பரிகாரம்கோரி, யாரால், யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றவிவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். செல்வராஜ் மகன்கள் , இன்பராஜ் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளின் தகப்பனார் செல்வராஜ், 1ம் பிரதிவாதி இன்பராஜ் மற்றும் நீங்கள் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

7. சா.சா.ஆ.1 எழுதப்பட்ட அதே தேதியில் ராமநாத செட்டியாரிடமிருந்து, 1ம் பிரதிவாதியும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.218/1,2 ன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 30 செண்ட் என்றால் எனதுபெயரிலுள்ள 90 செண்ட் இடத்தை எனது அண்ணனுக்கு கொடுத்துவிட்டேன். இதுமட்டும்தான் எனக்கு தெரியும். மொத்த இடத்தில்தான் சர்வே எண்.218/1,2 ல் கிரையம் வாங்கியுள்ளீர்கள் என்றால் ராமநாத செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேன்.

8. மொத்த சொத்தின் மேலோரம் 1 ஏக்கர் 10 செண்ட் இடத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.218/1,2 சொத்துக்களுக்கு தெற்கே, சர்வே எண்.218/5 உள்ளது என்றாலும், சர்வே எண்.218/5 ல் கிணறு உள்ளது என்றாலும், இதையும் சேர்த்துதான் சா.சா.ஆ.1 ன் படி கிரையம் வாங்கியுள்ளீர்கள் என்றால் ராமநாத செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கிய 18 ஏக்கர் எங்களது மூவருக்கும் பங்கு உள்ளது.

9. சர்வே எண்.219 உங்கள் மூவருக்கும் சொத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.219 ல் மேலோரம் 6 ஏக்கர் 5 செண்ட், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால்

நாங்கள் செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ள, நீங்கள் குறிப்பிடும் 6 ஏக்கர் 5 செண்ட் இடம் எங்கு உள்ளது என்பதை தேடிப்பார்த்துதான் சொல்லவேண்டும். மேற்படி 6 ஏக்கர் 5 செண்ட் இடத்திற்கு கீழ்பக்கம் 3 ஏக்கர் 3 செண்ட் இடமானது செல்வராஜ்க்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

10. செல்வராஜ்க்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 3 செண்ட் இடத்திற்கு கீழ்பக்கமுள்ள 3 ஏக்கர் 3 செண்ட் இடம் உங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். செல்வராஜ்க்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 3 செண்ட் இடத்தின் தெற்கே ஒரு கிணறும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 5 செண்ட் இடத்தில் ஒரு கிணறும் உள்ளது என்றால் சரிதான். செல்வராஜ் இடத்தில் உள்ள கிணற்றில் உங்களுக்கும், செல்வராஜ்க்கும் பாதி பாதி பங்கு உள்ளது என்றால் சரிதான்.

11. அதாவது 1ம் பிரதிவாதி இன்பராஜ்க்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 5 செண்ட் இடத்தில் உள்ள கிணறு அவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தெரியாது என வம்புக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. செல்வராஜ்க்கு பாத்தியப்பட்ட பாதி பங்கு கிணற்று உரிமையை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிணற்றில் பாதி பங்கு உரிமை செல்வராஜ்க்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12. உங்களுக்கும், செல்வராஜ்க்கும் இடையே நடைபெற்றதாக சொல்லப்படும பரிவர்த்தனை சம்பந்தமாக எழுத்துப்பூர்வமாக ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. அந்த ஆவணம் நாளதுதேதியில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வேஎண்.204/2 ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 90 செண்ட் என்றால் சரிதான். இந்த 1 ஏக்கர் 90 செண்டில் நடுப்பாக 63 செண்ட் இடத்தை செல்வராஜ் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

13. நீங்கள் சொத்தை கிரையம் வாங்கியதுபோல் 1ம் பிரதிவாதிக்கும் சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரிதான்.

**14. மறுவிசாரணை இல்லை**

ஒம்/-கே.பாஸ்கர்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

தென்காசி